----------

## 1.1 அபிப்பிராயம்

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வது எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை மாற்ற வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் நவம்பர் மாதத்திற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 199410 ஆன வாகனத் குத்தகை தவணை, தொலைத்தொடர்பு செலவின் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டமையால் வாகனத் குத்தகை தவணை அப்பெறுமதியால் குறைத்தும் தொலைத்தொடர்பு செலவின் கணக்கு அப்பெறுமதியால் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நவம்பர் மாதத்திற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த வாகனத் குத்தகை வாடகை கணக்கீடு செய்யும் போது தவறுதலாக அது தவறுதலாக தொடர்பாடல் செலவினக் கணக்கிற்கு சீராக்கப்பட்டிருந்தது. எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் | செலவின விடயங்கள் சரியாக இணங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாடநெறிக் கட்டணங்கள் ஒவ்வொரு பாடநெறியின் இறுதி பரீட்சைக்கு முன்னர் அறவிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 07 பாடநெறிகளுக்குரிய கிடைக்க வேண்டிய பாடநெறிக் கட்டணங்களாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 39,665,822 தொகையில் பாடநெறிகள் முடிவடைந்து 01 - 03 ஆண்டுகள் வரையான கால வீச்சில் காணப்பட்ட பெறுமதி ரூபா 19,984,027 ஆக இருந்தது. | பாடநெறிகளின் பூர்த்தி செய்யப்பட வேண்டிய குறைந்த காலம் மாத்திரம் முடிவடைந்து 01 – 03 வரையான காலம் கடந்திருந்ததுடன் அப்பாடநெறி களின் தொடர்ச்சியான காலம் அதாவது குறித்த பாடநெறியினை பூர்த்தி செய்வதற்கான ஆகக்கூடிய காலம் இதுவரை முடிவடைந்து இருக்கவில்லை. பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் இப்பாடநெறிகளை தமது கூடிய காலத்தில் பூர்த்தி செய்யும் சந்தர்ப்பங்களில் அம்மாணவர்களின் கட்டணங்கள் முழுமையாக கொடுப்பனவு செய்யப்படுகின்றன. | கிடைக்க வேண்டிய வருமானத்தை குறித்த காலப்பகுதியில் தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

---

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 1646 | ஒவ்வொரு மாதமும் நாளாந்த ஓட்ட குறிப்புக்கள் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் WPNC - 9019 ஆம் இலக்க வாகனத்தின் ஓட்ட குறிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் ஓட்ட குறிப்புக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பபடும் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவன சுற்றறிக்கை இலக்கம் 02/2010 மூலம் உள்ளீர்க்கப்பட்ட 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் பொது நிர்வாக சுற்றறிக்கை | சகல உத்தியோகத்தர் களினதும் வருகை மற்றும் வெளியேறல் பதிவுசெய்தல் கைவிரலடையால இயந்திரம் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் வருகை பதிவேட்டின் மூலம் மாத்திரம் வருகை மற்றும் வெளியேறல் செய்யப்பட்டிருந்தது. | தற்போது வருகை மற்றும் வெளியேறல் பதிவுசெய்வதற்காக கைவிரலடையால பதிவு செய்யும் இயந்திரங்களை அறிமுகப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் 2016 இன் 30 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | நிறுவகத்திடமுள்ள WPNC - 9019 ஆம் இலக்க குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட வாகனத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் எரிவு தொடர்பாக பரீட்சித்து ஓட்டக் குறிப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2018 ஒக்தோபர் மாதம் 10 ஆந் திகதி வாகனத்தின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் நாளாந்த ஓட்டக் குறிப்புக்களில் சமப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

----------------------------

### 2.1 நிதி விளைவுகள்

---------------------------------

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 31,978,203 மிகையாக இருந்ததுடன், அதனோடெத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 22,108,617 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 9,869,586 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீண்டெழும் மானியம் ரூபா 4,800,000 ஆலும், உள்ளக வருமான உழைப்பு ரூபா 14,005,572 ஆலும் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 02 ஆண்டுகளின் நிதி விளைவுகளை மீளாய்வு செய்த போது 03 ஆண்டுகளிலும் மிகை ஏற்பட்டிருந்தது. நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கருத்திற் கொண்டதன் பின்னர் போது 2016 ஆம் ஆண்டில் ரூபா 45,666,590 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு தொடர்ந்து அதிகரித்து 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 79,111,897 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆராய்ச்சி மானியமொன்றாக சுவிட்சலாந்தின் Foundation Open society Institute (FOSI) மூலம் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்காக திறைசேரிக்கு 2018 சனவரி 18 ஆந் திகதி கிடைத்திருந்த அமெரிக்க ஐக்கிய டொலர் 24633 தொகை (ரூபா 3,824,679) கணக்காய்வுத் திகதியான 2019 மார்ச் 07 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் ஆரர்ச்சிக்காக நிறுவக | சுவிட்சலாந்தின் Foundation Open society Institute (FOSI) மூலம் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்காக திறைசேரிக்கு அனுப்பிய பணத்தை திறைசேரியிடமிருந்து விடுவிப்பதற்காக பின்பற்றப்பட வேண்டிய நீண்ட செயற்பாடு காரணமாக பணத்தை விடுவித்தல் தாமதித்திருந்தது. | நிதியத்தினை துரிதமாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிறுவகத்தின் நிதியத்தை முறையாக முகாமைத்துவம் செய்து பயன்படுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நிதியிலிருந்து ரூபா 2,164,103 தொகை செலவிடப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த இருந்ததாலும் திறைசேரிக்கு குறித்த பணம் கிடைத்திருந்த மையாலும் நிறுவகத்தின் பணம் தற்காலிகமாக பயன்படுத்தப் பட்டு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகம் தொழிற்பாட்டு குத்தகை அடிப்படையின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட வேன் வண்டிக்காக மீளாயவாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மாதாந்த குத்தகை வாடகை ரூபா 2,392,920, எரிபொருள் செலவினம் ரூபா 218,092 சாரதியின் சம்பளம் ரூபா 630,202 மற்றும் மேலதிகநேர படிகள் ரூபா 128,059 என மொத்தச் செலவினம் ரூபா 3,374,273 ஆக இருந்தமையால் அதன் கிலோ மீற்றருக்கு சராசரி ஓட்டச் செலவினம் ரூபா 217 ஆன கூடிய அளவொன்றாக இருந்தது.. | இந்நிறுவனத்திற்காக வேன் வண்டி யொன்றை கொள்வனவு செய்வதற்கு நிதி அமைச்சரின் எழுத்துமூல அங்கீகாரம் னேகாரப்பட்ட போது அதன் போது நிதி அமைச்சினால் அந்த அமைச்சு மூலம் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைளுக்கு இணங் வேன் வண்டியொன்றை செயற்பாட்டுக் குத்தகையின் கீழ் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்திருந்தது. இதன் காரணமாக நிறுவகத்திற்கு மாற்றுவழியொன்றை பயன்படுத்த முடியாதிருந்தது. மேலும் வெவ்வேறு காரணங்களினால் மாற்று வழியொன்றை பயன்படுத்து வது நிறுவகத்திற்கு நடைமுறைச் சாத்தியமற்றதாக இருந்தது. | நிறுவகம் தேவைப்பாட்டிற்கு போதியளவில் வாகன வசதிகளை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2015 சனவரி 03 ஆம் திகதிய 1843/45 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவக வழிகாட்டியின் 6(அ) பிரவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் பரிந்துரையின் பேரில் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்திற்கு வழங்கப்பட வேண்டிய பட்டப்பின் படிப்பு மற்றும் டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும். மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தினால் மீளாய்வாண்டில் அவ்வாறான அங்கீகாரமொன்று இல்லாமல் 40 பட்டப்பின்படிப்பு பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தன. | இப்பாடநெறிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆரம்பமாவதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட பாடநெறி களாகும். எவ்வாறாயினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு பரிந்துரையின் பிரகாரம் இவ்வாறான பாடநெறிகள் தொடர்பான தகவல்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவிற்கு தெரியப்படுத்து வதற்காக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | காணப்படும் சட்ட விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 3.4 நிதிய பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இந்து ஸ்ரீ லங்கா மன்றத்தின் மூலம் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக 2017 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 368,125 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை | 2018 ஆம் ஆண்டில் தரவு சேகரித்தலின் ஆரம்ப செயற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதால் 2018 ஆம் ஆண்டில் எவ்வித செலவின மொன்றும் மேற்கொள்ளப்படவில்லை. 2019 ஆம் ஆண்டில் அந்த ஆராய்ச்சிகளுக்குரிய | நிதியத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| பன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | செலவினங்களை மேற்கொள் வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) நிறுவகத்தினுள் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் Minan Buddhist College Chaina மூலம் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த ரூபா 4,565,701 தொகை 2019 மார்ச் 07 ஆந் திகதி அளவிலும் உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாமல் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | சீனாவின் மினான் பௌத்த கல்வி நிறுவனம் (Minnan Buddhist College Chaina) மூலம் இரண்டு தடைவ குறித்த பணத்தை நிறுவகத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதற்காகவே வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிறுவகத்தினால் இப்பணத்தை மாணவர் விடுதிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அக்கட்டிட நிர்மாணததின் ஆரம்ப வேலைகள் தயார் செய்யப்படும் வரை அப்பணத்தை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. | நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிதியத்தை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |

**3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்திற்கு 2018 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்த ரூபா 4,000,000 தொகையில் ரூபா 2,500,000 தொகை 2018 ஒக்தோபர் 2 ஆந் திகதி வரை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் திட்டமிடப்பட்ட தற்காலிக வாகன நிறுத்துமிடம், சாரதி அறை, களஞ்சியம் மற்றும் மலசலகூட முறைமை போன்ற நிர்மாணங்கள் 2018 திசெம்பர் இறுதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இச்செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டில் முதல் அரையாண்டில் மேற்கொள்வதற்கு திட்டமிடப் பட்டிருந்த போதும் அது தொடர்பாக மதிப்பீட்டுத் திட்டம் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் வேலைப் பிரிவினால் 2018 ஒக்தோபர் மாதத்தின் போது நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில்பத்திரிகை அறிவித்தல் மூலம் அதற்கு உரிய பெறுகை செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | நிதியம் நிறுவகத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வ தற்காக செயற் திறனாக பயன்படுத்த வேண்டும். |

4. **நல்லாளுகையும் கணக்களி பொறுப்பும்**

4.1 **உள்ளகக் கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(I) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 09 பந்தி பிரகாரம், ஒவ்வொரு உள்ளக கணக்காய்வு பிரிவினாலும் தமது நிறுவனத்திற்காக காலாண்டிற்கு ஒரு முறை உள்ளக கணக்காய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமை குழு கூட்டத்திற்கு முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை தாபிப்பதற்காக தேவையான பதவியணியினர் தற்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விடம் கோரப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் முறையற்ற வகையில் இதுவரை பேராதனைப் பல்கலைக் கழகத்தின் உள்ளக கணக்காய்வு செயற்பாடு களுக்காக சேவை பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அவர்களுக்கு போதியளவு மனித வளங்களை வழங்காமை காரணமாக முறையான உள்ளக கணக்காய்வு திட்டமொன்றின் அடிப்படையில் DMA/A/2009(i) முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம், பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் வழி காட்டலின் பிரகாரம் பிரகாரம் விரைவில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஆரம்பிக்கப்பட வேண்டும். |

4.2 **பாாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
|---|---|---|
| பாதிடப்பட்ட வருமானங்களை யும் செலவினங்களையும் உள்ள வாறான வருமானங்களையும் | உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்கள் வெவ்வேறு காரணிகள் | நடைமுறை ரீதியான பாதீடொன்றை தயாரித்து அதற்கு |

| | | |
|---|---|---|
| செலவினங்களையும் ஒப்பீடு செய்த போது 13 விடயங்களில் 20 சதவீதம் முதல் 143 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை | அடிப்படையில் காணப்படுவதால் அந்நடவடிக்கைகளில் வருமானம் மற்றும் செலவினங்களில் 100’ சரியாக எதிர்வுகூறுவது சிரமமாகும் ஆபத்தை குறைப்பதற்காக பொதுவாக மிகை மதிப்பீடு செய்யப்படுகன்றது. | இணங்க செயற்பட வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்தி**

---------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய NP/SP/SDG/IA ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் மீளாய்வாண்டில் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்காணப்பதற்கு / தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவகத்தினால் தற்போது மேற்கொள்ளப்படுகின்ற சில ஆராய்ச்சிகள் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வது தொடர்பாக தற்போது இந்நிறுவகம் விரிவான திட்டமொன்று தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் எதிர்காலத்தில் அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் | உரிய வழிகாட்டல்களுக்கு விரைவில் இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |